DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : முத்துராஜ் | Father/Husband Name : பொன்னுச்சாமி |
| Age : 63 | Village : ஸ்ரீவில்லிபுத்தூர் |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 Mar 2026 12:4710 Mar 2026 12:48

(A1 charge abated. A2, A3 Present. A4 not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். தற்போது ஸ்ரீவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது 30.01.2017 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் பெருமாள் சாமி, தலைமை காவலர் நடராஜன், முதல் நிலை காவலர் மருது பாண்டியன் துரைமுருகன் ஆகிய போலீஸ் பார்ட்டிகளுடன் சேதுராமலிங்கபுரத்திற்கு தெற்கேயுள்ள வைப்பாற்று பகுதியில் மணல் திருட்டு தடுப்பு சம்பந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து வந்தபோது ஆற்றின் தெற்கு கரையோரம் TN 57 J 8726 என்ற டாடா பிக்கப் வேனில் திருட்டுத்தனமாக மணல் அள்ளிப்போட்டுக்கொண்டு இருந்தவர்கள், போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் மேற்படி வேனை அங்கேயே நிறுத்திவிட்டு தப்பியோடிவிட்டார்கள்.

3. பின்னர் நாங்கள் அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது அந்த வேனில் சுமார் ½ யூனிட் மணலும் 3 மண்வெட்டிகளும், 3 இரும்பு தட்டுகளும் இருந்தது. மேற்படி நபர்கள் அரசு அனுமதியின்றி கனிம வளத்தையும், நீர்வளத்தையும் சேதப்படுத்தும் வகையில் திருட்டு மணல் ஏற்றிய வாகனத்தினையும், இரும்பு தட்டுகள் மற்றும் மண்வெட்டிகளையும் அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து, அதன் பேரில் கைப்பற்றி 10.30 மணிக்கு காவல்நிலையம் வந்து குற்ற எண் 35/2017 பிரிவு 379 இ.த.ச r/w 4(1)(1A), 21(1) Mines and Minerals Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.) (முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மணலுடன் கூடிய TATA Pickup வாகனம், 3 மண்வெட்டி மற்றும் 3 தட்டுகள் ஆகியவை சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்பட்டவை ஆகும். **(புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3 மண்வெட்டிகள் அ.சா.பொ.1 ஆகவும், 3 இரும்பு தட்டுகள் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.)**

5. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை கனம் சாத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2 அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய மேற்படி சொத்துக்களை படிவம்-91ல் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க நிலைய எழுத்தரை அறிவுறுத்தினேன். **(படிவம்-91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் சார்பு ஆய்வாளர் திரு.பெருமாள்சாமி, தலைமை காவலர் நடராஜன் மற்றும் முதுநிலை காவலர் மருதுபாண்டியன் துரைமுருகன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது

வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

6. இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில் தகவலின் பேரில் 31.01.2017 ம் தேதி மதியம் 15.00 மணிக்கு 1 வது எதிரியான கீழத்தாயில்பட்டி வடக்கு தெரு, வள்ளிராஜ் மகன் செல்வமணி என்பவரை தாயில்பட்டி – சாத்தூர் செல்லும் ரோட்டில் உள்ள கூட்டுறவு வங்கி அருகே வைத்து கைது செய்து சாட்சிகள் கிருஷ்ணகுமார் மற்றும் மாரிச்சாமி ஆகியோர் முன்னிலையில் விசாரித்தேன். அப்போது எதிரி செல்வக்கனி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து, அதில் மேற்படி சாட்சிகள் மற்றும் எதிரியிடம் கையொப்பம் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அவருடன் எதிரிகள் ஞானதுரை, காளிராஜ் மற்றும் பாலமுருகன் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், போலீசாரை பார்த்ததும் ஓடிவிட்டதாகவும் கூறியுள்ளார். பின்னர் எதிரி செல்வக்கனியை 16.15 மணிக்கு காவல்நிலையத்திற்கு கொண்டுவந்து கைது நமுனா தயார் செய்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கின் கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

7. ஆஜர் எதிரிகளான ஞானதுரை மற்றும் காளிராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

8. நான் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் மொத்தம் எவ்வளவு நாள் பணியாற்றினேன் என்றால் இந்த வழக்கு சம்பவ காலத்தில் ஒரு மாதம் மட்டுமே பொறுப்பில் இருந்தேன். அதற்கு முன்பு நான் சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் பணியாற்றினேனா என்றால் இல்லை. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்த காவல் ஆய்வாளர் யார் என்றால் காவல் ஆய்வாளர் மாரியப்பன் ஆவார், அவர் என்னை 10.02.2017 ஆம் தேதி விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை 31.01.2017 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 30.01.2017 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டது, ஆனால் கையெழுத்து போடும்போது தேதி தவறுதலாக 31 என்று குறிப்பிடப்பட்டு விட்டது. தேதி தவறாக குறிப்பிடப்பட்டு விட்டது என்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் இல்லை. அது தொடர்பாக நீதிமன்றத்திலும் அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், அத்தாட்சி மற்றும் முதல் தகவல் அறிக்கை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்பதாலும் தான் என்னுடைய கையொப்பத்திற்கு கீழே மேற்படி தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. அத்தாட்சியில் மூன்று நபர்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கியதாக அத்தாட்சியில் இருக்கிறது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் 12 வது காலத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பெருமாள் சாமி மற்றும் தலைமை காவலர் நடராஜ் ஆகிய இரண்டு நபர்கள் மட்டுமே அத்தாட்சியில் கையொப்பம் செய்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஒரு சாட்சியின் பெயர் அதில் குறிப்பிடாமல் விடுபட்டுள்ளது. நான் கூறுவது போல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்பதாலும் நான் மேற்படி குறைபாடு இருக்கிறது என்றால் சரியல்ல. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் மண்வெட்டி இரும்பு கைப்பிடியை கொண்டதா அல்லது மர கைப்பிடியை கொண்டதா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து பொருட்களை கைப்பற்றியிருந்தால் அந்த பொருளின் விபரத்தை குறிப்பிட்ட அத்தாட்சியில் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் மணலின் மதிப்பு ரூபாய்

1000/- என்பதை நான் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், மணலின் மதிப்பை பொதுப்பணித்துறை பொறியாளர் மட்டும்தான் மதிப்பீடு செய்ய முடியும் என்றாலும் சரியல்ல.

10. படிவம்-91ன் 1வது காலத்தில், டாட்டா பிக்கப் லோடு வேன் ½ யூனிட் மணலுடன் கூடியது என்று குறிப்பிட்டுள்ளது "½ யூனிட் மணலுடன் கூடியது" என்பது மட்டும் வேறு நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் அது திருத்தி எழுதப்பட்டுள்ளது. (புலன் விசாரணை கோப்பில் உள்ள கார்பன் நகலில் "½ யூனிட் மணலுடன் கூடியது" என்பது எழுதப்பட்ட படிவம் 91 இருக்கிறது, எதிரிகளுக்கு சார்வு செய்யப்பட்ட நகலிலும் அது காணப்படுகிறது. ஆனால் நீதிமன்ற கோப்பில் உள்ள படிவம் 91 அந்த விபரம் காணப்படவில்லை) படிவம் 91 நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட பிறகு படிவம் 91 அடித்தல் திருத்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்கள் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் பணியாற்றிய காவல் துறையை சார்ந்த நபர்கள் என்றால் சரிதான்.

11. அத்தாட்சி சாட்சிகளை நான் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். நான் மூன்று சாட்சிகளையும் விசாரித்தது காவல் ஆய்வாளருக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் மூன்று சாட்சிகளை விசாரித்தேன் என்ற விபரத்தை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது கூறினேனா என்றால் கூறவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும், எதிரியை கைது செய்த போது அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. வாகனத்தை வீட்டிலிருந்து கைப்பற்றி இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அத்தாட்சியில் உள்ள மணல் காவல் நிலையத்தில் இருப்பு இருந்த மணல் என்றால் சரியல்ல. அத்தாட்சியில் உள்ள மண்வெட்டி மற்றும் இரும்பு தட்டு சாதாரணமாக கடைகளில் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். அதைத்தான் நான் வாங்கி அத்தாட்சியில் காண்பித்து உள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து எவ்விதமான பொருளையும் அத்தாட்சியில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

12. அத்தாட்சி, முதல் தகவல் அறிக்கை மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளிவிபரத்திற்காக எதிரிகள் மீது பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

10 Mar 2026 13:22

Judicial Magistrate 2, Sattur.